09.04.2026 பி.வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஒ.எஸ்.எண். 114 /2016 ) திருமதி.உலகம்மாள்.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>–

1) நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் 5 வது படித்துள்ளேன். எழுதப்படிக்கத்தெரியுமா என்றால் படிக்கத்தெரியும் எழுதத்தெரியாது. எனது முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் என்னைப்பொறுத்து சரியான சங்கதிகள் என்றால் சரிதான். வாதி தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு எனது கணவர் உயிருடன் இருந்த போது தாக்கல் செய்த எதிர்வழக்குரை சங்கதிகள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தை 1,2 மற்றும் 6 வது பிரதிவாதிக்கும் சேர்த்து சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். மாரியம்மாள் மற்றும் அருள்மாணிக்கம் என்பவர்கள் எனக்கு சொந்தக்காரர்களா என்றால் பங்காளிகள். வாதி வழக்கில் 2 சொத்து விவரங்களை காண்பித்து 1ம்தபசில்சொத்தின் ஒரு பகுதி 2ம்தபசில்சொத்து என்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதி வழக்குதாக்கல்செய்வதற்கு முன்பாகவே 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார்கள் என்றால் சரிதான். வாதி அனுப்பிய அறிவிப்புக்கு எனது தரப்பில் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். நான்குடியிருக்கும் வீடு டவுண் சர்வே எண்.36 என்றால் எனக்கு தெரியாது. எனது வீட்டிற்க்கு முன்பு 1ம்பிரதிவாதி மாரியம்மாள் வீடு அமைந்துள்ளது என்றால் சரிதான். மாரியம்மாள் வீட்டிற்கு முன்பு மேற்கு பக்கம் அருள்மாரியப்பன் அவரது தம்பி இரண்டு வீடுகளாக கட்டி குடியிருந்துவருகிறார்கள் என்றால் சரிதான். அந்த வீட்டில் தெற்கு பக்கம் காளிதாஸும் வடக்கு பக்கம் அருள்மாரியப்பன் குடியிருந்துவருகிறார்கள் என்றால் சரிதான்.மேற்படி அருள்மாரியப்பன்,

காளிதாஸ் வீட்டிற்கு முன்பு தென்வடல் அரசுக்குப் பாத்தியப்பட்ட ரோடு செல்கிறது என்றால் சரிதான். அருள்மாரியப்பன், காளிதாஸ் வீட்டிற்குரிய மேற்கு பார்த்து வீட்டின் வாசல் ரோட்டை பார்த்து அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி தென்வடல்ரோட்டை கடந்து சென்றால் ரயில்வே டேரக் செல்கிறது என்றால் சரிதான். அருள்மாரியப்பன் இடத்திற்கு அடுத்து கிழமேலாக தெரு போகிறது என்றால் தவறு சந்து செல்கிறது. அதன் சர்வே எண்.32 என்றால் ஞாபகமில்லை. அந்த சந்து அரசுக்குப் பாத்தியப்பட்ட இடம் என்றால் இல்லை எங்கள் கையிருப்பு இடம் எங்கள் பங்காளிகளுக்கு 4 பேர்களுக்கு அந்தபாதை பாத்தியப்பட்டது. சந்துக்கு வடக்கு பக்கம் சரவணன் வீடு உள்ளது என்றால் சரிதான். சரவணன் வீட்டிற்கு அடுத்து ஆட்டோ முருகன் இடமாக இருந்து தற்போது நடராஜன் குடியிருந்துவருகிறார் என்றால் சரிதான். எனது கையிருப்பு இடமாக நான்சொல்லுவதை வாதி தெரு என்று கூறும் இடத்தை அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்ட இடமாக இருந்தால் அதுதவறு என்றால் சரிதான். கையிருப்பு இடம் என்று சொல்லும் சந்து அரசு ஆவணங்களின்படி சர்வே எண்.32 என்றால் எனது கணவருக்குத்தான் தெரியும். எனது வீட்டின் வாசல் படி வடக்கு பார்த்து அமைந்துள்ளது என்றால் சரிதான். எனது வீட்டின் வாசல்படியை தாண்டி எனக்கு எந்த சொத்தும் இல்லை என்றால் சரியல்ல. சரவணன், நடராஜன் பின்புறம் தென்வடல் அரசுக்குப் பாத்தியப்பட்ட இடம் என்றால் சந்து உள்ளது.அது அரசுக்குப்பாத்தியப்பட்டஇடமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி சரவணன்,நடராஜன் வீட்டிற்கு செல்லும் தென்வடல் சந்துக்கு பின்புறம் வாதிகளின் உறவுக்காரர்களான 14 முதல் 19 வரையிலான குடியிருப்புவீடுகள் உள்ளது என்றால் சரிதான். வாதிகளின் வீட்டிற்கு பின்புறம் டவுண் சர்வே எண்.20 என்ற தென்வடல் பாதை உள்ளது என்றால் கிடையாது. கோமதியம்மாள் எனக்கு என்ன

உறவு என்றால் எனது மாமனாருக்கு சித்தி முறை வேண்டும். அந்த இடம் அவர்களுக்கு பூர்வீக இடம் நாங்கள் 5,6 தலைமுறையாக அங்கு இருக்கிறோம். எனது கணவர் தாக்கல்செய்தள்ள எதிர்வழக்குரையில் சரவணன்,நடராஜன், மற்றும் எங்களுக்குரிய இடம் என்று சொல்லக்கூடிய நிலத்திற்குரிய ஆவணங்களான பட்டா,சிட்டாக்கள், வரி ரசீதுகள்,வரைபடம் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். எதிர்வழக்குரையில் வாதியின் வழக்கு பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் தாக்கல்செய்யாததால் வாதியின் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் சாட்சியத்தின் மூலமாக வாதியின் வழக்கு பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் தாக்கல்செய்யாத வாதியின் வழக்கு நிலைநிறிக்கத்தக்கதல்ல என்று சொல்லக்கூடிய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நீதிமன்ற வழக்கறிஞர் ஆணையாராக இருந்து தாவாச்சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது தரப்பில் இடம் சம்பந்தமாக நகராட்சி அலுவலர்களை விசாரிக்க தயராக உள்ளேனா என்றால் உள்ளேன். நகராட்சி அலுவலரை விசாரணை செய்தால் வாதி தரப்பில் சொல்லும் டவுண் சர்வே எண்.32 –ல் சொல்லப்படும் ரோடு எனது தரப்பில் சொல்லப்படும் கையிருப்பு நிலம் என்று தெரியவரும் என்றால் சரிதான்.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> – வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
09.04.2026.